

# யோகி - அவயோகி விளக்கமும் கணிதமும்

பஞ்சாங்க கணிதமணி
**பாலு சரவணசர்மா- ஸ்ரீதணிகை பஞ்சாங்கம்**

==================================================

ஜனன ஜாதகத்தில் பஞ்சகத்தில் உள்ள திதி, நட்சத்திரம், யோகம், கரணம், வாரம் இவை அனைத்தும் ஜன்ம காலத்தில் மிக முக்கிய பங்கு வகிப்பவை. இதில் நட்சத்திரம் அனைவருக்கும் நன்கு அறிந்த விஷயம். அதுபோல் ஒருவரின் ஜன்ம திதி, ஜன்ம வாரம், ஜன்ம யோகம், ஜன்ம கரணம் ஆகிய நான்கும்கூட மிகமுக்கியமானதாகும்.

குறிப்பாக திருமணம், சுபகாரியங்கள் துவக்கம் போன்ற விஷயத்தில் பொருத்தமான தினசுத்தி கணிதம் செய்ய யோகம் ஒரு முக்கியபங்கு வகிக்கிறது.

நட்சத்திரம், யோகம் இரண்டுமே 27தான் உள்ளது.

**யோகம் தரும் நட்சத்திரம்;**

இதில் யோகத்திற்கு ஈடான எண் கொண்ட நட்சத்திரத்தில் இருந்து ஈடான 8ஆம் நட்சத்திரம் யோகத்தை தரும் நட்சத்திரமாகும்

**யோகம் தரும் கிரகம்**

யோகம் தரும் நட்சத்திரத்தின் தசை நாதன் யோகம் தரும் கிரகமாகும்

**அவயோக நட்சத்திரம்**

இதில் யோகத்திற்கு ஈடான எண் கொண்ட நட்சத்திரத்தில் இருந்து 22ஆம் நட்சத்திரம் அவயோக நட்சத்திரமாகும்.

**அவயோக கிரகம்**

அவயோக நட்சத்திரத்தின் தசைநாதன் அவயோகி கிரகமாகிறார்

**யோகி - அவயோகி நிலை**

- ஒருவரின் ஜாதகத்தில் பிறந்த யோகத்தை அறிய வேண்டும்
- அவரின் ஜன்ம யோகத்தின் யோகம் தரும் நட்சத்திரம் எங்கு உள்ளது என்று அறிய வேண்டும்
- யோகம் தரும் நட்சத்திரத்தின் சாரத்தில் என்ன கிரகம் சஞ்சரிக்கிறது என்று அறிய வேண்டும்
- அப்படி சஞ்சரித்தால் அந்த கிரகமும் அந்த கிரகத்தின் தசை நடக்கும் காலமும் யோக காலமாகும்
- இந்த காலம் ஜயயோகாதி காலம் என அழைக்கப்படும்
- யோகதாரா நட்சத்திர கிரகமானது விஷசூன்ய ராசி நிலையில் இருப்பினும் நற்பலனை தருவார்

விஷசூன்ய ராசி அட்டவணை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பிரதமை | துலாம், மகரம் | | சஷ்டி | மேஷம், சிம்மம் | | ஏகாதசி | தனுசு, மீனம் |
| துவிதியை | தனுசு, மீனம் | | சப்தமி | தனுசு, கடகம் | | துவாதசி | துலாம், மகரம் |
| திருதியை | மகரம், சிம்மம் | | அஷ்டமி | மிதுனம், கன்னி | | த்ரயோதசி | ரிஷபம், சிம்மம் |
| சதுர்த்தி | கும்பம் ரிஷபம் | | நவமி | சிம்மம், விருச்சிகம் | | சதுர்தசி | மிதுனம், கன்னி தனுசு, மீனம் |
| பஞ்சமி | மிதுனம், கன்னி | | தசமி | சிம்மம், விருச்சிகம் | | அமா, பவுர்னமி | இல்லை |

# யோகி – அவயோகி அட்டவணை

| வ. எண் | யோகம் வரிசை | நட்சத்திர வரிசை | யோகம் தரும் நட்சத்திரம் | யோகம் தரும் கிரகம் | அவயோக நட்சத்திரம் | அவயோக கிரகம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | விஷ்கம்பம் | அஸ்வினி | பூசம் | சனி | திருவோணம் | சந்திரன் |
| 2 | ப்ரீதி | பரணி | ஆயில்யம் | புதன் | அவிட்டம் | செவ்வாய் |
| 3 | ஆயுஷ்மான் | கிருத்திகை | மகம் | கேது | சதயம் | ராகு |
| 4 | சௌபாக்யம் | ரோகினி | பூரம் | சுக்கிரன் | பூரட்டாதி | குரு |
| 5 | சோபனம் | மிருகசீருஷம் | உத்திரம் | சூரியன் | உத்திரட்டாதி | சனி |
| 6 | அதிகண்டம் | திருவாதிரை | அஸ்தம் | சந்திரன் | ரேவதி | புதன் |
| 7 | சுகர்மம் | புனர்பூசம் | சித்திரை | செவ்வாய் | அஸ்வினி | கேது |
| 8 | த்ருதி | பூசம் | சுவாதி | ராகு | பரணி | சுக்கிரன் |
| 9 | சூலம் | ஆயில்யம் | விசாகம் | குரு | கிருத்திகை | சூரியன் |
| 10 | கண்டம் | மகம் | அனுஷம் | சனி | ரோகினி | சந்திரன் |
| 11 | விருத்தி | பூரம் | கேட்டை | புதன் | மிருகசீருஷம் | செவ்வாய் |
| 12 | துருவம் | உத்திரம் | மூலம் | கேது | திருவாதிரை | ராகு |
| 13 | வியாகதம் | அஸ்தம் | பூராடம் | சுக்கிரன் | புனர்பூசம் | குரு |
| 14 | ஹர்ஷணம் | சித்திரை | உத்ராடம் | சூரியன் | பூசம் | சனி |
| 15 | வஜ்ரம் | சுவாதி | திருவோணம் | சந்திரன் | ஆயில்யம் | புதன் |
| 16 | சித்தி | விசாகம் | அவிட்டம் | செவ்வாய் | மகம் | கேது |
| 17 | வயதீபாதம் | அனுஷம் | சதயம் | ராகு | பூரம் | சுக்கிரன் |
| 18 | வரியான் | கேட்டை | பூரட்டாதி | குரு | உத்திரம் | சூரியன் |
| 19 | பரிகம் | மூலம் | உத்திரட்டாதி | சனி | அஸ்தம் | சந்திரன் |
| 20 | சிவம் | பூராடம் | ரேவதி | புதன் | சித்திரை | செவ்வாய் |
| 21 | சித்தம் | உத்ராடம் | அஸ்வினி | கேது | சுவாதி | ராகு |
| 22 | சாத்யம் | திருவோணம் | பரணி | சுக்கிரன் | விசாகம் | குரு |
| 23 | சுபம் | அவிட்டம் | கிருத்திகை | சூரியன் | அனுஷம் | சனி |
| 24 | சுப்ரம் | சதயம் | ரோகினி | சந்திரன் | கேட்டை | புதன் |
| 25 | பிரம்மம் | பூரட்டாதி | மிருகசீருஷம் | செவ்வாய் | மூலம் | கேது |
| 26 | மாஹேந்திரம் | உத்திரட்டாதி | திருவாதிரை | ராகு | பூராடம் | சுக்கிரன் |
| 27 | வைத்ருதி | ரேவதி | புனர்பூசம் | குரு | உத்ராடம் | சூரியன் |

**யோக ஸ்புட கணிதம்**

(சூரிய ஸ்புடம் + சந்திரஸ்புடம்) = யோக ஸ்புடம்

(யோகஸ்புடம் /13° 20′) + 1 = யோகம்

**உதாரணம்:** சூரியன் ஸ்புடம் 185° 52′ சந்திர ஸ்புடம் 312° 24′

185° 52′ + 312° 24′ = 498° 16′ 498° 16′ - 360° = 138° 16′ (360°க்கு மிகுமேயானால் 360°ஐ கழிக்கவும்)

(138° 16′ / 13 20 ) = 10.37 = 11வது யோகம் விருத்தி வருகிறது

யோக முடிவு கணிதம் அறிய சூரிய – சந்திர தினகதி கொண்டு கணிக்க வேண்டும்

விரிவாக அறிய எனது இணையத்தை www.prohithar.com பார்வை இடவும்.